DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

STC .No. 1637/2022

PW - 1

| | | |
|---|---|---|
| Name: ஜோதிலிங்கம் த/பெ. கிருஷ்ணன் | PW –1 (Cross ) | Date: 22.11.2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.11.2023** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, இளநிலை உதவியாளர்.

**(எதிரி ஆஜர்.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மாலை 05.33 மணி )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1) நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியும், கையெழுத்து நன்றாக போடுவேன். நான் என்ன என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மாட்டு தீவனம், பல தானியங்கள் மற்றும் புண்ணாக்கு ஆகிய விவசாய சம்மந்தப்பட்ட தொழில்களை செய்து வருகிறேன், எனது வீட்டில் பெட்டி கடை வைத்தும் நடத்தி வருகிறேன். மேற்படி விவரங்களை எனது மனுவிலோ, பிராமண வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எதிரி எப்படி பழக்கம் என்றால் வியாபார ரீதியாக பழக்கம். நான் எதிரியிடம் உள்ள பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் வகையில் பழக்கம்.

2) எனது தொழிலுக்கு பெயர் எதுவும் இல்லை. நான் எதிரியிடமிருந்து வாங்கியுள்ள பொருட்களை ஒரு கடையில் விற்பனை செய்து வருகிறேனா என்றால் ஆமாம். மேற்படி கடையின் முகவரி 78 ஏ 4, திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் என்ற முகவரியில் கடை நடத்தி வருகிறேன். எனது பிராமண வாக்குமூலத்தில் சில்லறை வியாபாரம் நடத்தி வருவதாக சொல்லியுள்ளேன், கடை வைத்து நடத்தி வருவதாக சொல்லவில்லை. எதிரி எனக்கு 7 வருடங்களாக பழக்கம். மேற்படி கடையை நான் சுமார் 15 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் கைமாற்று கடனாகதான் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம், மருத்துவ தேவைக்கு என்று கேட்டார். மேற்படி மருத்துவ தேவை யாருக்கு என்ன நோய்க்காக, எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்வதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3) என்னிடம் எதிரி எந்த தேதியில், எந்த இடத்தில், எந்த வருடத்தில் பணம் கேட்டார் என்றால் 02.06.2022ம் தேதியில் எனது வீட்டில் வந்து மருத்துவ தேவைக்காக கேட்டார். மேற்படி விவரத்தை எனது மனுவிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது அ.சா.2 மாணிக்கம் என்பவர் எனது வீட்டில் இருந்தார் என்ற விவரத்தை மனுவிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி என்னிடம் ஒரு மாத காலத்தில் வாங்கிய பணத்தை திருப்பி தருவதாக சொல்லி பெற்றுச் சென்றார். என்னிடம் காட்டப்படும் மனுவில் 3ம் பக்கத்தில் நான் கையெழுத்து போட்ட இடத்திற்கு மேலே எவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ரூ.7000/-ம் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) நான் கொடுத்த பிராமண வாக்குமூலத்தில் 02.07.2022ம் தேதியில் காசோலை கொடுத்ததாகவும், மேற்படி காசோலை 30.07.2022ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். STC.No.1675/2022 என்ற வழக்கில் நான் கொடுத்த பிராமண வாக்குமூலத்தில் 02.07.2022ம் தேதியில் பணம் கேட்டதாகவும், அதற்கு அவர் 02.08.2022ம் தேதியிட்ட காசோலையை ரூ.4,00,000/- த்திற்கு கொடுத்ததாகவும் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**மறு விசாரணை - இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்.:- மதியம் 05.40 மணி )**